757

உ

கற்பகவிநாயகர் துணை.

இராமநாதபுரம் ஜில்லா சிவகெங்கை தர்மாசனம்.
வேம்பத்தூர், சங்கவித்வான்களிலொருவராகிய
பிர்மஸ்ரீ, சிவதாஸன் என்ற
சர்க்கரை பாரதிகளால்

தென்காசி லோகாம்பிகை பேரில்

பாடப்பெற்ற.

பஜனைக்கீர்த்தனைகள்

இஃது
ஷை வேம்பத்தூர், சிலேடைப்புலி,
பிர்மஸ்ரீ பிச்சுவய்யரவர்கள் கனிஷ்ட புத்திரன்
நடேசபாரதியாரால்,

தென்காசி,
ஸ்ரீராமாநுஜம் அச்சு ஆபீஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்.

1101-ளு பிரஜோத்பத்தி, மீன மாசம்

5 AUG 1932

Q25:417.211975K
N32
85774

உ

கற்பகவிநாயகர் துணை.

இராமநாதபுரம் ஜில்லா சிவகெங்கை தர்மாசனம்.
வேம்பத்தூர், சங்கவித்வான்களிலொருவராகிய
பிர்மஸ்ரீ, சிவதாசன் என்ற
சர்க்கரை பாரதிகளால்

தென்காசி லோகாம்பிகை பேரில்

பாடப்பெற்ற.

பஜனைக்கீர்த்தனைகள்

இஃது
ஷை வேம்பத்தூர், சிலேடைப்புலி,
பிர்மஸ்ரீ பிச்சுவய்யரவர்கள் கனிஷ்ட புத்திரன்
நடேசபாரதியாரால்,

தென்காசி,
ஸ்ரீராமாநுஜம் அச்சு ஆபீஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

காப்பிரைட்.

1107-ளு பிரஜோத்பத்தி, மீன மாசம்

உ

கற்பகவிநாயகர் துணை

தென்காசி லோகாம்பிகை பேரில்பாடிய பஜனைக் கீர்த்தனைகள்.

1966
784.0954

காப்பு.

விற்பனர்வாழ் தென்காசி மேவியருள் செய்யுமெங்கள்
கற்பகவி நாயகனே காப்பு.

(1) இராகம் நாட்டை தாளம் ரூபகம்.

பல்லவி.

ஓங்கார ஸ்வரூபா உள்ளன்பர்க்கு ப்ரகாச தீபா. (ஓ)

அனுபல்லவி.

தாங்கும் வல்லபை மகிழும் மோகா
தமனியமய மான தேகா
ஓங்கு கருணா ரஸப்ர வாகா
வுயர் கயமுக பூத சமுகா
(முடுகு) ஓதித்தினம் யாதுற்றவர்
போதத்தினி லேமுற்றிய
ஒளிவிடு மணிதனை நிகர்தரு
முமையவள் மகிழ்பெறு ப்ரியசுத. (ஓங்)

சரணம்.

1966
784.0954

பாசாங்குச தரகர வரா
பாலசந்த்ர சேகரா சிரா
ஈசாத்மஜ னேசுப கரா
இமையவரிறை பரவிடு பரா
(முடுகு) ஏகப்பொருளே சற்குரு
வேதியற்கனு கூலப்படை
இனியசொல் வினவிரிய விசைவொடு மிதுநல
சமையநி னருள்தர (ஓங்)

85774

பூஜிதபுண்ய சரித்ரா
புகலும்வேதா கம சாஸ்த்ரா
விசுசாமர நிகருஞ் சுரோத்ரா
வியோம சோம சூர்யாக்னி நேத்ரா

(முடுகு) மேன்மைச்சிவ தாஸப்ரிய
லோனுக்குப தேசத்துடன்
வெகுவித ரஸவிசை கனதனம்
மிகுதவ முதவியே க்ருபைதழை. (ஓம்)

(2) இராகம் புன்னாகவராளி தாளம் ஆதி.

பல்லவி

வா வா வேலவா மஹானுபாவா (வாவா)

அனுபல்லவி.

காவா வுயருங் குகா சண்முகா முருகா (வா)

சரணம்.

தாரகனைப் பொடித்த தாரக ரூபா
தீரவடியர் வினை தீரமயிலின் மிசை (வாவா)

பாதியுமை மருவு மாதிரை நாளா
கோதில் மறைப்பொருள்சொல் க்யாதி பெறும்புல்வா. (வா)

பழனிமலை மகிழ்தென் பழனிமலையா
பழகுசிவதாஸ னன்பழகு பெற்றிடவே தேவா. (வா)

(3) இராகம் ஆனந்த பைரவி தாளம் ஆதி.

பல்லவி.

தாயே தயைசெய்குவாய் சரஸ்வதி (தாயே)

அனுபல்லவி.

சேயேனுனையாவ லாயே துதிக்கச்செய்
வாயேயென் னாவிலுறை வாயே க்ருபைதழை (தா)

சரணம்.

அம்புஜன் மகிழன்னமே—கலைஞான
வலங்கிர்த மிகுஞ் சொர்ணமே
கும்பார் முப்பத்துமுக் கோடிதேவரும் புகழ்
(முடுகு) கோகனங்க்ரக மாகவுவந்திடு
போகமோக்ஷப்ர தாயகமேயெந்தன். (தா)

கானரஸப்ர வாகியே—சுவேதாப்புஜங்
கமழும் வச்ர நிர்த்தேகியே
மானேயென் னுவிலூருந் தேனையுனைநிதம்
(முடுகு) வந்தனங்கள் புரிந்திடும்படி
சிந்தைமகிழ்வொடு சந்ததமு மெந்தன் (தா)

வீணாதரபாணியே—படிகவடம்
மேவும் புத்தக பாணியே
ஊணாமிர்தமே உற்றோர் சுகிர்தமே
(முடுகு) உனையே துதிநிம்பை யரனடிமைதமிழ்
உலகுபரவிட வரமுதவியே யென் (தா)

——[நீ]——

(4) இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஏகம்.

பல்லவி.

வானீயம்பா வாநீ வரந்தா —வாநீ

அனுபல்லவி.

மத்தகஜ கமனியே —வாநீ

சரணம்.

நானினியுந் தனையன்றி நம்பேன்பிற தெய்வமொன்றை
தேனினன் மொழியே திகழ் கயல்விழியே
செஞ்சரணநூபுர முஞ்சலசலவென —வாநீ

கதம்பக னவாசி கமழ்முகங் காசிவாசி
யாதரவில்லையா வதுவென மல்லையா
அன்பன் றுதித்ததெல்லா முன்செவி கேட்கலையா வாநீ

பூமிபுகழ் நிம்பைவாஸன் புரஹர சிவதாஸன்
புத்தியினத்தி புகல்வது சித்தி
புரியாதென லோகாம்பிகையே பராசக்தி —வாநீ.

(5) இராகம் காப்பி தாளம் ரூபகம்.

பல்லவி.

சந்த்ரசேகரா சம்போ (சந்)

அனுபல்லவி.

சுந்தரி மீனுக்ஷி பாகா
எந்தனையாளும்வை போகா (சந்)

சரணம்.

நீலகண்ட தேவதேவா நிர்மலமஹானு பாவா
காலனை வென்றிடுங் கோவா கர்த்தனேயென் கண்முன்வாவா. (சந்)

பந்தபாப சோகநாசா பக்தரக்ஷக விஸ்வாசா
கந்தநீபா ரண்யவாசா கமலமுக மந்த ஹாஸா (சந்)

மாமதுராபுர க்ஷேத்ரா வைத்திடுங் கபால பாத்ரா
சோமசூரியாக்னி நேத்ரா சொல்லுஞ்சிவதாஸன் ஸ்தோத்ரா (சந்)

---

(6) இராகம் தோடி தாளம் ரூபகம்.
பல்லவி.

ஆனந்த நடன பிர்மானந்த நடன சம்போ.

அனுபல்லவி.

கானலோல கருணுகர கைலாசா தீப சங்கர (ஆன)

சரணம்.

பக்தபாப மோசனசு கப்ரதாயகா
பாலசந்த்ரசேகரா பத்மநாபசாயகா
சக்திதர கௌமாரப்ரிய சகலலோகநாயகா
தருக்குமேம நாதன்கர்வந் தணிக்கும் வீணுகாயகா

ஜதி.

தகஜெணு தகிடத ததிமித தகணக ஜந்திரி குந்தரி
தாதா கிடதகு தளாங்கு ததிங்கணத்தோம்
தாதா கிடதகு தளாங்கு ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம் தீங்கணத்தோம்
கிணத்தோம் நத்தோம் தோமென்றுடிய (ஆன)

சரணம்.

சிரகபாலதரத்ரிசூல சேகரா பராபரா
தீனஜனசம் ரக்ஷணவிஷ சேகரா கருணுகரா
சுரவரபவ பாபபஞ்சன சுந்தரா நிரந்தரா
துதிக்கும் நிம்பைச்சிவ தாஸன்சொற் றுணைசெயுந்தயாகரா

ஜதி.

தகஜெணு தகிடத ததிமித தகணக ஜம்தரி குந்தரி
தாதா கிடதகு தளாங்கு ததிங்கணத்தோம்
தாதா கிடதகு தளாங்கு ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம் திங்கணத்தோம்
கிணத்தோம் நத்தோம் தோமென்றாடிய (ஆன)

(7) இராகம் எதுகுலகாம்போதி தாளம் திரிபுடை.

பல்லவி.

எந்தனிடத்தில் வர்மமா யிந்தசோதனை தர்மமா (எ)

அநுபல்லவி.

சுந்தரி மீனாக்ஷிநேசா சோமதர சுந்தரேசா
முடுகு. தூரத்திவரும் விடத்தையமுதெனவே
உண்டிந்திரன் விண்டஞ்சனொடு
சுரர்க்குவரு மிடுக்கண் வினையது
கெடக்கருணை முழக்கு முதல்வனாகிய நீ (எந்)

சரணம்.

உந்தனை நம்பவில்லையா வுற்றெனைக் காக்கமலேயா
யிந்தனஞ் சுமக்கலேயா யேழைமேற்றயவில்லையா
இரக்கமுன தகத்திலணு வில்லையா—யெங்குந் தங்கு
மிரக்கமுன தகத்திலணு வில்லையா
யெவர்க்குமுன மிதைப்புகல்வதுசொல்
இருக்குமறை துதிக்குமிறைவனாகிய நீ (எந்)

ஏனமுண்ணப்பால் கொடுத்தா யிறைவன்மேற் கவிதொடுத்தாய்
ஆனைதனையும் படுத்தா யன்றெழு புயல்தடுத்தாய்
அமைச்சர் மகிழ் மகிழ்வுறப் பரியில்வந்ததிர்த்துநதி
மிகுத்துவருஜல மடைக்க முதுகினி
லடிக்கவுயி ரெவைக்கு முடலுறவருணி. (எந்)

(8) இராகம் கமாஸ் ஏகதாளம்.

பல்லவி.

எந்தனையா ளையனே யிமையவர் துதிபுரி சரணிணை தொழும்.

அநுபல்லவி.

பாலநயனனாங்க பாலதரனேபரி
பாலஞ்செய்துனது பாலனெனவே. எந்.

சரணம்.

மாதுரிய மொழிசேர் மாதுரியெனும்பரஞ்
சோதியுந்த னெழுத்தஞ் சோதி மகிழ்ந்திட எங்.

வாச நிம்பையூர்ச்சிவ தாசன் பதத்தின்மிக
நேசமீனம்பிகைப்ரா னேசவகமகிழ்ந். (எங்)

(9) இராகம் சாவேரி தாளம் ரூபகம்.

பல்லவி.

ஜடாமகுடதர சங்கர தீனரக்ஷக பாகிமாஞ் (ஜடா)

அனுபல்லவி.

நடனுபி ராமகாம நாசசுப்ர காசசந்த்ர (ஜடா)

சரணம்.

மதுராபுரபூபபக்த வற்சலவர தாயகா
மதுகரஜங்கார நீபவன சிங்காரநாயகா
முடுகு. வலை யவிற்கிரைய ப்ரசித்த
வன்னிநயன மவுன சித்த
கலசோற்பவப்ரிய கரங்கண சுபமங்கள (ஜடா)

925.417.21199 N32

(10) இராகம் இந்துஸ்தான் தோடி ஏகதாளம்.

பல்லவி.

வாவா வன்னையே யென்னை ரெக்ஷிக்க வாவா.

85774

அனுபல்லவி.

காவியை நேர்விழி யோவியமாம்பர
தேவியெனக்கஞ்சல் கூவி விரைவொடு வாவா,

சரணம்.

சங்கரியாதி சதுர்மறைநீதி
தமியற் குதவும் ப்ரக்யாதி தயங்காத சேதியோதி வாவா.

அங்குசபாணி யழகுயர்வேணி யமைந்திடும்
காற்பத்தி முக்கோணி யடியேனுய்யும் வழிதோணி வாவா.

உலகேயுன்பாத முதவும்ப்ரசாத
முற்றுன்றனைப் பாடுங் கீதங் கேட்டருளாதெனவினோதம்()

நிம்பையுர்வால னிகழ்கவிராசன்
நின்னருள் பெற்றிடு மாவேச னகமகிழ வாவா.

(11) இராகம் நாதநாமக்கிரிகை தாளம் ஏகம்.

பல்லவி.

பாபமோர்சனியே பக்த பாலலோசனியே

அனுபல்லவி.

தீபவொளி யாகியன்பர் சித்தவிருள் ளைத்தருள்செய் பா.

சரணம்.

உன்னையும் பாடி லோபியர்களைத்தேடி
ஊர்களெங்குமோடி யுழல்வேனோவாடி
அன்னையுலகே வுந்தனடியினை வந்தித்தேன் கோடி பா.

இனிச்சகியாது யேழைமையெனுந்தீது
யீசர்க்கேனுமது யிப்போதேயோது
கனிமொழி யென்பதினாற் கருணைசெய்வாயென்மீது பா.

நிம்பையூர்வாச னினதடி தொழுந்தாஸன்
நம்பினேனென்றுசர ணம்புகுநேசன்
துன்பமொழித்திட லரிதோ பாண்டித்துரைமகளாம் பா.

(12) இராகம் தன்யாசி தாளம் ஆதி.

பல்லவி.

கனகதண்டிகை மிசைவரு முலகுமையவள்
காக்ஷிகண்டவர் முத்தரே கதிர்நவமணி கனக.

அனுபல்லவி.

வனமயில் குயில்நட மிசைநிறை குளிர்பொழில்
வளமருவிய தென் வாரணசிதனில் கன.

சரணம்.

பஞ்சார்நூபுர முஞ்சார் பதமலர்
பாடுமன்பர்கள் கூட்டம் அழகினில்
மிஞ்சாள ரதியென வுஞ்சார்பதுமினி
யோரபிநய வாட்டம்
விஞ்சையர் நிறை சிரேஷ்ட மொடு
தஞ்சமென்றவர் வாட்டம்
சஞ்சலங்க ளஞ்சிநின்றிடும்படி
சகலரூபமுந் திகழவே மேவிடும். கன.

இந்திரன் மருவிய வர்தவுலகினிலு
மிந்தமகிமையேது யடர்
பந்தவினைகளெம தொந்தரை மிருபவம்
வந்து மருவிடாது
சந்ததஞ் சுபஞ் சிறந்திலங்கிய
சந்த்ர வதனிசந்த்ர சேகரி பிரபைஜொலி கன.

(13) இராகம் கல்யாணி தாளம் ஆதி.

பல்லவி.

பக்தஜன ரக்ஷகி சக்திலோகநாயகி பரமசுகுண தாயகி

அனுபல்லவி

நித்யகல்யாணிமலை யத்விஜகுமாரி
சித்தர் கின்னரர்பணி யுத்தமிகௌமாரி (பக்)

சரணம்.

வானுலகத்திலுயர் வானமெறன்கானைவளர்
வரதவிஸ்வநாதர் மருங்கிலிருக்குந்தேவி
தீனரக்ஷகசர்வ ஜீவதயாபரி
திவ்யகுணலிதிரு சூலிகபாலி நீலி (பக்)

அஷ்டலக்ஷுமியிந்தி ராணிசரஸ்வதி
அடியுகளத்தில்பாரி ஜாதமலரார்ச்சிக்க
இஷ்டமுடன்மேனகை ரம்பை திலோத்தமை
யிங்கிதசங்கீத யபிநயமாய்நடிக்கத்
துஷ்டர்களைக்களைந்து சிஷ்டர்களைரக்ஷைபுரி
சுமுகி கிருபாகரி சுந்தரி ராஜேஸ்வரி (பக்)

வாசமலர் நிறைந்த மாமலைச்சோலைகளில்
மயில்கள் நடனமிடுங் குயில்களிசைகள் பாடும்
பூசுராதிமறை பேசிய சித்திராநதியிற்
பூசித்து நீராடுந்தென் காசிப்பதியில் வாழும். (பக்)

14. இராகம் கமாஸ் தாளம் ரூபகம்

பல்லவி

சங்கரகை லாசவாசா சரஸமுக மந்தஹாஸா.

அனுபல்லவி.

கங்காதரா ஜடிலபாரா கணிநரகித வேதசாரா
சிங்கார சுந்தரசெம்பீரா சீரையொடுந் திரிபுரசம்ஹாரா

சரணம்

ஆலகால விஷபாண ஆன்பர்க்கருள் செய்யபிமாண
காலகால த்ரிகலேக்ஞாண கருணாசா கரமோண
காம்யார்த்த பலதாயகா கமலாக்ஷ ஸ்ரீஹரிசாயகா
வாமிமகிழும் வரநாயகா மங்களவீணா காயகா. (சங்)

---

15. இராகம் கல்யாணி ஏகதாளம்.

பல்லவி.

சம்போ சங்கரா சிவசாம்ப நித்யசுபகரா. (சம்)

அனுபல்லவி.

அம்புஜ தளயுக பாதனே யனையுலகுமையவ ளொருபுற
மருவுகு ணாதீதனே குணாதீத நீதயபேத வடியவர்மனோகரனே
யெனையாளும் வரப்பிர சாதனே த்ருபுரஹர (சம்)

சரணம்.

செம்பொ னிகருஞ்சடா பாரனே சிறுமதலையை
யுணவியைந்தவர்க்கருள்செய் பராபரனே
பராபரனே சங்கரனே கிங்கரர்பணி யமனையடர்தீரனே
சிவதாசற் கருள்வாதனே (சம்)

——[நீ]——

16. இராகம் தர்பார் தாளம் ரூபகம்.

பல்லவி.

சித்திவிநாயகப்பஜேகம் தீனவிக்னஹரசுபகர (சி)

அனுபல்லவி.

சுத்ததாவள்யார்த்த சந்த்ர சுப்ரகாசயேகதந்த
(முடுகு) சூலகட்க பாசாங்குச தோமரகர பாபநாசா (சி)

சரணம்.

சாருபங் கஜபாதம் சம்ப்ரம மோதகபுக்தம்
கோரபவ சமனம் மதகுஞ்சரவதனம்
(முடுகு) பாரமகுட தாமணிமய பானுகோடி கிரணசுதைய
ஸாரஸாக்ஷ தஸ்வரூப சாமளீ கிருதஸ்வரூப (சி)

17. இராகம் அசாவேரி தாளம் ரூபகம்.

பல்லவி.

கஜவதநாகரு ணாகரமூர்த்தே நிஜவர பக்தஸம் ரக்ஷணகீர்த்தே.(க)

அனுபல்லவி.

பாசாங்குசதர பங்கஜஹஸ்தா
யீசாத்மஜஜெக தீசப்ரஸித்தா (கஜ)

சரணம்.

சோமகலாதரா சுந்தரவர்ண
சாமகானலோலா சாமரகர்ண (கஜ)

சிவகதாவிஹதி மேகுரு சீலா
கவினுத செகதா சிர்த்த பரிபாலா (கஜ)

18. இராகம் காம்போதி தாளம் ஆதி.

பல்லவி.

எந்தனை யாள்முருகா சண்முகா (எ)

அனுபல்லவி.

எந்தநேரமு முந்தன் கந்தமலர்பாதத்தை
வந்தனைபுரியவுங் கொந்தலர் சொரியவும் (எ)

சரணம்.

மைக்குழலார்மோக வலைக்குள்ளெலிபோன்மனஞ்
சிக்கியே வுலகர் சிரிக்காம லனுதினஞ்
தென்பழனிப் பதிவாழ் தெண்டாயுதபாணியே
நிம்பைச் சிவதாஸன் சொல் நெஞ்சிற்றயவாய்ப்பேணியே (எ)

19. இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

பல்லவி

சரணுகதஞ் சந்ததந் துவற்பாதப்ரகாச (ச)

அனுபல்லவி·

கருணு சிந்தோ சங்கரா தீனபந்தோ (ச)

சரணம்.

பவரோகதீன சமனசுஞான
பரிபாலன சோபன நடன (ச)
வருணோதாரோ பத்ரவமோசன
மதனங்க சூர்ன பாலலோசன (ச)
மதுராபுரேசா மமபாபநாசா
மங்களப்ரகாசா வதீதபூதேசா (ச)

20. இராகம் சுருட்டி ஏகதாளம்.

பல்லவி.

வருத்தந் தவிர்த் தருள் புரிவாய்
வரமுதவி யதிவிரைவாய் (வரு)

Q25:417.2119 N32

அனுபல்லவி.

நிருத்தனஞ் செயுங் கருத்தனகிய
நீதாமரைமலர்ப் பாதாவெனதுள் (வரு)

சரணம்.

காலன்றனையுதைத்த காலனெனவேமறை
கதறிடுஞ் செகநாதா—மிரு
கண்டுதனையன் மார்க்கண்டனுக் காயுள்மிக
வளரும்படி செய்தாதா
வோலமெனக்குதவி யுனையன்றிவேறிலை
யுலகத்தவரிட மிகவெய்த் தலைவுறு (வரு)

பூதலத்தினிற் கொலை காதகர் நற்பதனற்
புந்திபுழுங்கலாமா —கலை
நாமகளிந்திரமால் பதவியு மன்பர்க்கருள்
புகழென்னுற் சொல்லப் போமா
பாதிமதியணிந்த வாதிமூலமேசம்போ
பக்தர்க்கருள்வர சித்தத்தினிலுறு. (வரு)

சோதிமிகுந்தவுமை பாதியேயெனையிந்தச்
சோதனைசெய்யலாமா —வதி
துஷ்டனென்றாலுஞ் சேயைக் கஷ்டப்படுத்தவே தாய்
துணியுஞ்செய லுண்டாமா
மேதினிதுதிநிம்பை யூர்ச்சிவதாஸன்பாடும்
மிகமெய்த்துதவிசெய் கருணைக்கடலேயென் (வரு)

பஜனைக்கீர்த்தனைகள் முற்றிற்று.

85774

உ
கற்பகவிநாயகர் துணை.

விளம்பரம்.

வீரைக்கவிராஜபண்டிதரவர்கள் பாடிய மானுமதுரை,

ஸ்ரீ ஆனந்தநாயகிமாலை

ஷெயார் குமாரர் அம்பிகாபதி அய்யர் அவர்களாற் பாடப்பெற்ற

பராபரைமாலை.

வேம்பத்தூர், சிலேடைப்புலி பிரம்மஸ்ரீ பிச்சுவய்யரவர்கள் பாடிய

சிந்தாமணி விநாயகர் பதிகம்.

திருப்பரங்குன்றம் ஸ்ரீ முருகப்பெருமான்

ஆனந்தக் களிப்பு.

ஸ்ரீமீனாக்ஷி அம்மன் கும்மி, கோலாட்டப்பாட்டு.

இந்நூலாசிரியரால், மதுரைச் சுந்தரேசர் செய்த திருவிளையாடல்
வண்ணம், திருவெற்றியூர் ஸ்ரீ பாகம் பிரியாள் மாலை,

தென்காசி, லோகாம்பிகை பதிகம்.

ஷெயார் பாடிய திருவிளையாடல் கீர்த்தனைகள் அச்சிலிருக்கிறது,
வேம்பத்தூர் பிரம்மஸ்ரீ K. கோவிந்த பாரதியாரவர்களாற் பாடிய

கூடற் பதிகம்.

ஷெ புஸ்தகம் வேண்டுவோர்கள் அடியிற்கண்ட விலாசதார்கள்
இடம் பெற்றுக்கொள்ளலாம்.

P. நடேச பாரதி,
வேம்பத்தூர், ஷெபோஸ்டு.
இராமநாதபுரம் ஜில்லா.

P. பாஸ்கர அய்யர்,
மதுரைக் காலேஜ், தமிழ்ப் பண்டிதர்,
சொக்கப்பநாயக்கன்தெரு, மதுரை.

ஸ்ரீராமாநுஜம் பிரஸ், தென்காசி.